ஸ்ரீதணிகை பஞ்சாங்கம் - பாலு சரவண சர்மா
பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர், ஜோதிஷர், பஞ்சாங்க கணிதக்ஞர்
9, 4வது தெரு, கல்யாண நகர், மேற்கு தாம்பரம், சென்னை 45, கைபேசி: 98403 69677
prohithar@gmail.com www.prohithar.com www.thanigaipanchangam.com

# ஆடி மாத மடல் - துன் முகி வருடம்

**ஆடி மாத பிறப்பு**

திருக்கணிதப்படி : 16.07.2016 சனி அன்று காலை 10:15 மணிக்கு கடகரவி பிரவேஸம்.
வாக்கியப்படி: 16.07.2016 அன்று சனி மாலை 27 நாழிகை 37 விநாழிகை (மாலை 04:57) கடகரவி பிரவேஸம்.

ஆத்தாளக்கு மிகவும் உகந்த இந்த ஆடி மாதத்தில் ஐந்து செவ்வாய்கிழமைகள் வருகிறது.
இம்மாதத்தில் ஆடி அமாவாசையும், ஆடிப்பெருக்கும், ஆடிச்செவ்வாயும் ஒருசேர வருகிறது கூடுதலாக இத்தினத்தில் வாக்கிய பஞ்சாங்கப்படி குரு கன்னி இராசி பெயர்ச்சியும் நடைபெறுவது சிறப்பான ஒன்றாகும்.

---

**குரு பெயர்ச்சி:**

வாக்கிய பஞ்சாங்க முறைப்படி 2.8.2016 செவ்வாய் அன்று காலை 9:27 மணி அளவிலும், திருக்கணிதப்படி குருவாரத்தில் 11.8.2016 அன்று இரவு 9:29 மணி அளவிலும் குரு கன்னி ராசிக்கு பெயர்ச்சி அடைகிறார்

ரிஷபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இராசியினருக்கும் நன்மையும் மற்றவர்களுக்கு சுமாரான பலனும் கிட்டும். குறிப்பிட்ட இராசியினர் தவிர மற்றவர்கள். ஆதரவற்றோர் இல்லத்தில் தானம் செய்து பின்னர் நவக்கிரக குருவிற்கு (தட்சினாமூர்த்திக்கு அல்ல) அர்ச்சனை செய்து வழிபடவும்.

2025வரை 12 இராசிகளின் குரு பெயர்ச்சி தொடர்பான விரிவான தகவலுக்கு எனது கீழ்கண்ட இணையத்தை காணவும்
http://www.thanigaipanchangam.com/guru_peyarchi/index.php

---

**ரஜஸ்வலை:**(நதிகளில் குளிக்ககூடாத நாட்கள்) **ஆடி** 1,2,3

தக்ஷிணாயன புன்னியகாலத்தின் முதல் மூன்று நாட்கள் நதிகள் பாபஅசுத்தமாக இருக்கும் இத்தினங்களில் நதிகளில் குளிக்ககூடாது என்கிறது சாஸ்திரங்கள். பிரேதகாரியங்கள், அஸ்தி கரைப்புக்கு விதிவிலக்கு

---

**வாமன துவாதசி** 16.7.2016 **சனி**

இத்தினத்தில் விஷ்ணுவை வாமனரூபத்தில் தியானித்து அஷ்டோத்திரம் பாராயணம் செய்தால் தடைபெற்ற காரியங்கள் கைகூடும். கல்வியில் மேன்மை கிட்டும்.

---

**ஆகாமாவை:** 19.7.2016

ஆஷாட பவுர்ணமி தினத்தில் சூரியோதயத்தில் சமுத்திரஸ்நானம் மிகவும் புன்னியத்தை தரும்.
**ஆ - கா - மா - வை** என்றால் ஆஷாடம், கார்தீகம், மார்கசீருஷம், வைசாகம் என்று அழைக்கப்படும் சாந்திரமான மாதத்தின் முதல் எழுத்தின் சேர்கை. இம்மாதத்தில் வரும் பவுர்ணமி சூரிய உதயத்தில் இருக்கும் காலத்தில் நதி, கடல்களில் நீராடல் புன்னியமாகும்.

ஆடி தலைச்செவ்வாய் அன்று பவுர்ணமி வருவது மிகவும் சிறப்பாகும்.

---

**குரு பூர்னிமா** 19.7.2016 **செவ்வாய்**

கலைகள் கற்றுத்தந்த குருவை வணங்கி ஆசிபெறவும். புதியகலைகள் துவக்கவும் உகந்தநாளாகும். இத்தினத்தில் கல்வி கற்று தந்த ஆசிரியர்களை சந்தித்து பழங்களை தந்து காலில் விழுந்து வணங்குவது புன்னியமாகும்.

---

**அசூன் யசயன விரதம்** 21.7.2017 **வியாழன்**

ஸ்ரீலக்ஷ்மியையும் ஸ்ரீநாரயணரையும் தம்பதி நிலையில் ஒருசேர பூஜிக்கும் நாளாகும். இத்தினத்தில் ஊஞ்சல் சேவை செய்தல் நன்று. இல்லங்களில் ஊஞ்சல் அமைத்து ஸ்ரீலக்ஷ்மியையும் ஸ்ரீநாரயணரையும் வைத்து "லாலி" பாடுதல் நன்று.

---

**நீலகண்டாஷ்டமி - புதாஷ்டமி** 27.7.2016 **புதன்**

விஷபயம் நீங்கவும், விஷக்கடியால் வந்த நோய் குணமடையவும் சிவனை வில்வத்தால் துதித்து பூஜை செய்தல் நன்று. மேலும் புதன்கிழமையில் சூரியோதயத்தில் அஷ்டமி இருக்கும் நாள் துர்கை அம்மனுக்கு மிகவும் விசேஷமான நாளாகும். இத்தினத்தில் எலுமிச்சைக்காய் ஆதரவற்றோர் இல்லத்தில் தானம் செய்தல் நன்று. மாலையில் சிவசக்தி வழிபாடு செய்து தீபம் ஏற்றவும்.

---

**ஆடி கிருத்திகை 28.7.2016 வியாழன்**

தமிழ்கடவுள் அழகன் முருகனுக்கு மிகவும் உகந்த விசேஷ நாட்களில் ஒன்றான இன்று இறைவனை வணங்கி சேவித்தால் எதிரிகள் தொல்லை நீங்கி வாழ்வு வளம் பெறும், சந்தான பாக்கியம் கிட்டும்இன்று அறுபடைவீடுகளில் இறைவன் தெப்பத்தில் . திருஉலா வரும்நாளாகும்.

---

**யோகினி ஏகாதசி 30.7.2016 சனி**

ஏகாதசி விரதம் விரதங்களுள் மிகமிக முக்கியமான விரதமாகும். இன்று உபவாசம் இருப்பது மிகுந்த புண்ணியத்தைக் கொடுக்கிறது. சனிக்கிழமையில் வரும் இந்த ஏகாதசி மிகவும் சிறப்பானதாகும்.

**புத்திரத ஏகாதசி 14.8.2016 ஞாயிறு**

சிராவண சுத்த ஏகாதசி “புத்திரரத ஏகாதசி” என்று அழைக்கப்படுகிறது. புத்திர பாக்யம் வேண்டியும், குழந்தைகள் நீண்ட ஆயுளுடன் , நோயின்றி வாழ பெருமாளை வணங்குவதாகும். இன்று தன்வந்திரி ஸ்வருபமான விஷ்ணுவை ஆராதனை செய்தல் நன்று.

---

**ஆடி அமாவாசை 2.8.2016 செவ்வாய்**

தட்சிணாயன புன்யகாலத்தில் வரும் முதல் அமாவாசையான ஆடி மாத அமாவாசை முன்னோர் நினைவாக வழிபட மிகவும் உகந்த நாள்இந்த நாளில் தர்பணம் செய்து , ஆதரவற்ற முதியோர்களுக்கு தானம் செய்வது நன்று. காலையில் பசுவிற்கு கோதுமை தவிடு 2 கிலோ, வெல்லம் 200 கிராம், அகத்திகீரை கலந்து பசுவிற்கு தானம் செய்யவும்.

---

**ஆடிப்பெருக்கு 2.8.2016 செவ்வாய்**

18ம் பெருக்கு என்று அழைக்கப்படும் இந்நாளில் கன்னியர் திருமணம் வேண்டியும், திருமணமான தம்பதி நீண்ட நாள் மங்களகரமாக வாழவும் வேண்டி ஆற்றில், நீர்நிலையில் வழிபாடு செய்து தீபம் ஏற்றும் நாளாகும்.

---

**ஆடிப்பூரம் 5.8.2016 வெள்ளி**

சைவத்திருக்கோவில்களில் அகிலத்தை காத்தருள அம்பாள் அவதாரம் எடுத்த திருநாளாக கொண்டாடப்படுகிறது. அபிராம பட்டருக்கு அம்பாள் காட்சியளத்த சோழவளநாட்டின் திருத்தலமான திருக்கடவூரில் இன்று மிகவும் சிறப்பான ஆராதனைகள் நடைபெறும்

**ஸ்ரீஆண்டாள் ஆடிப்பூரம்:** சூடிக்கொடுத்த சுடர்கொடியும் வில்லிபுத்தூரார் வளர்புமகளுமான ஸ்ரீஆண்டாளின் திருநட்சத்திரமான இன்று வில்லிப்புத்தூரில் சிறப்பு பூஜைகளும் ஸ்வாமி புறப்பாடும் விமர்சையாக இருக்கும்

---

**ஸ்வர்ண கௌரி விரதம் : 5.8.2016 வெள்ளி**

அம்மனை தரிசித்து துர்காஷ்டகம் படித்தால் ஏழை பெண்கள் திருமண தடை நீங்கும். பொன் ஆபரணங்கள் கூடும். ஏழ்மை விலகும். இல்லாமை குறையும்.

---

**நாக சதுர்த்தி 6.8.2016 சனி**

அனைத்து தெய்வங்களின் கழுத்திலும் சுற்றிக்கொண்டு தெய்வத்தின் தலையில் குடைபோல் பாதுகாக்கும் நாகத்தை வழிபடும் நாளாகும் இன்று உடன் பிறந்த சகோதரர்களின் நலமுடன் விளங்க வேண்டி சகோதரிகள் அருகில் உள்ள அம்மன் கோவில் அல்லது பாம்பு புற்றுக்கு நாக தேவதைக்குப் பூஜை செய்து, புற்றுக்குப் பால் ஊற்றி, புற்றுமண்ணைப் பிரசாதமாக அணிந்து கொள்ளவும்பின்னர் . சகோதரர்களுக்கும் காதில் புற்றுமண்ணை சாற்றவும்.

புற்றில் பால் ஊற்றும் பொழுது வாசுகி, கிஷகாலன் , அப்ஜன் , மகரி அப்ஜன் , கங்குபாலன் , கார்க்கோடன் , குளிஜன் , பத்மன் ஒன்பது நாக தேவதைகளின் திருநாமத்தை கூறவேண்டும்

அதே நேரத்தில் வண்டலூர் உயிரியல் பூங்காவில் உள்ள நிஜமான பாம்பின் ஒருநாள் பராமரிப்பு செலவிற்கும் தானம் அளிப்பது புன்னியம் தரும்.

**தூர்வா கணபதி விரதம்:** இத்தினத்தில் அருகம் புல்மாலை சாற்றி விநாயகரை வழிபடுதல் நன்று. யானைக்கு தீனி தானம் செய்ய உகந்தநாளாகும்.

---

**தெலுங்கர் சுபநாட்கள்**

ஆடி அமாவாசைக்கு பின்னர் தெலுங்கர்களுக்கு ஆவணி மாதம் பிறக்கும். சிராவண மாத அடிப்படையில் கிரஹப்பிரவேஸம், திருமணம் உட்பட அனைத்து சுபங்களையும் செய்ய உகந்த நாட்களாகும்.

நாக பஞ்சமி 7.8.2016 ஞாயிறு

இன்று ஸ்ரீகருட அவதர தினம். 12 நாகர்களை ஆவாஹன பூஜை செய்து பால் பாயாஸம் அமுது படைத்து, தச முடிச்சுக்கள் உள்ள தோரகந்தத்தைக்(தோரணம்) கட்டிக்கொண்டு தீர்கமங்களம் கிடைக்க கருடனை பிராத்தனை செய்ய வேண்டும் என "வ்ரத ஸூடாமணி" என்றும் மூலநூல் எடுத்துரைக்கிறது .

பக்ஷிராஜர் தரிசனம்: கருட தரிசனம்:அன்று கருடனை தரிசித்தல் மிகவும் நன்று விரைவில் சுபகாரியங்கள் நடைபெறும். அருகில் உள்ள மிருக காட்சி சாலைக்கு சென்று தரிசித்தும், கருடனின் பரமரிப்புக்கு நிதி உதவி செய்தும் இறைவனருள் பெறலாம்.

---

பணி கௌரி விரதம்: 7.8.2016 ஞாயிறு

இளம் வெயில் வேளையில் இளம் துளிர்வேப்பிலையால் மாலை தொடுத்து அம்மனுக்கு சாற்றி நோய்கள் நீங்க லலிதா சஹஸ்ரநாமம் படித்தல் நன்று. மறுநாள் அம்மனுக்கு சாற்றிய வேப்பிலையை நீரில் இட்டு நீராடவும்.

---

வரலட்சுமி விரதம் 12.8.2016 வெள்ளி

சாந்திரமான "சிரவண" மாஸ பவுர்னமிக்கு முன்னர் வரும் வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறுது. இந்த விரதத்தை சுமங்கலி பெண்கள் திருமண நிலையில் உள்ள கன்னியர் அனுஷ்டித்து நல்வாழ்கை அமையவும், நல்ல கணவன் அமையவும் திருமகளை வேண்டி வழிபடுவதாகும். இத்தினத்தில் ஏழை பெண்களுக்கு புதிய புடவை தானம் செய்தல் மிகவும் புன்னியமாகும். மேலும் மஞ்சள் தூளை ஆதரவற்றோர் இல்லத்தில் தானம் செய்வது நன்று. கலசம் வைத்து, விரதம் இருந்தும் சுமங்கலிகளை அழைத்தும் விமர்சையாக வழிபடலாம்.

---

சேவல் - மயில்- நாகம் தரிசனம்:

ஆடி மாத சஷ்டி திதிகளில் முருகனின் கோவில் சென்று சேவல் - மயில் தரிசனம் நன்று, இத்தினத்தில் புது வாகனங்களுக்கு பூஜை செய்து முருகனை தரிசித்தல் நன்று.

முருகன் கோவிலில் சேவலை நேர்த்திக்குகடனுக்கு விட உகந்தநாளாகும். ஆடி சஷ்டி திதிகளில் புலால் உணவை முற்றிலும் கைவிடவும்.

---

ஆடி மாதத்தில் தானம்:

இந்தாண்டு ஆடி மாதத்தில் 5 செவ்வாய்கிழமைகள் வருகிறது. இத்தினங்களில் ஏழை சுமங்கலிகளுக்கு புடவை எடுத்து தருதல், தாம்பூலம் தருதல் மங்களத்தை தரும். ஏதேனும் ஒரு செவ்வாய்கிழமையில் ஆதரவற்ற இல்லத்தில் நல்லெண்ணைய் தானம் செய்தால் ஆயிரம் தீபங்கள் ஏற்றிய புண்ணியம் கிட்டும்

ஆடி வெள்ளி, ஆடி செவ்வாய் தினங்களில் பசுவிற்கு பூஜை செய்து கோதுமை தவிடு தானம் செய்தால் வேலை வாய்ப்பு பெருகி குடும்ப பொருளாதாரம் விருத்தி அடையும்.

---

## வானவியல் நிகழ்வு

**புத சுக்கிர சேர்கை** : 16.7.2016 அன்று மாலை சூரிய அஸ்தமனத்தில் புதனுக்கு மிக அருகில் சுக்கிரன் தோன்றும்
**குரு அருகில் நிலவு** : 6.8.2016 அன்று குருவுக்கு மிக அருகில் நிலவு தோன்றும். இது இந்தியாவில் தெரியாது

---

**ஆடி மாத சுபநாள் விளக்கம்**




ஆடி 3 திங்கள் 18.7.2016
அதிகாலை முதல் மாலை 3 மணி வரை நன்று.

ஆடி 6 வியாழன் 21.7.2016 சுபதினம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் சுபம் செய்ய நன்று.

ஆடி 7 வெள்ளி 22.7.2016 சுபதினம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் சுபம் செய்ய நன்று.

ஆடி 9 ஞாயிறு 24.7.2016
பிற்பகல் 2 மணி மேல் சுபம் செய்ய நன்று.

ஆடி 10 திங்கள் 25.7.2016
அதிகாலை சுபம் செய்ய நன்று **(தெலுங்கர்களுக்கு நாள் முழுவதும் நன்று).**

ஆடி 11 செவ்வாய் 26.7.2016 வாஸ்து நாள்
வாஸ்து நேரம் : காலை 6:41 மணி முதல் காலை 8:11 மணி வரை. சிம்ம ராசியினர் வாஸ்து பூஜை தவிர்க்கவும்.

ஆடி 17 திங்கள் 01.8.2016
அதிகாலை முதல் சூரிய அஸ்தமனம் வரை சுபம் செய்ய நன்று.

ஆடி 18 செவ்வாய் 02.8.2016
ஆடிப் பெருக்கு, ஆடி அமாவாசை, ஆடி செவ்வாய், குரு பெயர்ச்சி (வாக்கியப்படி)

**ஆடி 19 புதன் 3.8.2016**
**தெலுங்கர்களுக்கு ஆவணி (சிரவண) மாத பிறப்பு**

ஆடி 20 வியாழன் 4.8.2016 சாந்திரமான சுபதினம்
அதிகாலை 4:30 மணி முதல் 6 மணி வரை கிரஹப்பிரவேஸம் நன்று. தெலுங்கர்களுக்கு நாள் முழுவதும் சுபநாள்

ஆடி 23 ஞாயிறு 07.8.2016 சுபதினம்
ராகு கேது தோஷ பரிகாரம் செய்ய உகந்த நாள் (நாகபஞ்சமி, கருட பஞ்சமி)
அதிகாலை முதல் நாள் முழுவதும் அனைத்து சுபம் செய்ய நன்று.

ஆடி 24 திங்கள் 8.8.2016
அதிகாலை முதல் 7:30 மணி வரை நன்று. (வாக்கிய பஞ்சாங்கப்படி நாள் முழுவதும் சுபதினம்)

ஆடி 26 புதன் 10.8.2016
அதிகாலை முதல் பகல் 10:30 மணி வரை அனைத்து சுபங்கள் செய்ய நன்று.

ஆடி 28 வெள்ளி 12.8.2016 வரலட்சுமி விரதம்
மாலை 4:30 மணி மேல் இரவு 8 மணி வரை அனைத்து சுபங்கள் செய்ய நன்று.

ஆடி 30 ஞாயிறு 14.8.2016 சுபதினம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் நன்று.கிரஹப்பிரவேஸம் செய்ய உகந்த நாள்.

---

**புதிய இல்ல கிரஹப்பிரவேஸ நாட்கள் (தெலுங்கர்களுக்கு)**

| | | |
|---|---|---|
| 4.8.2016 வியாழன் | 7.8.2016 ஞாயிறு | 8.8.2016 திங்கள் |
| 10.8.2016 புதன் | 14.8.2016 ஞாயிறு | |

---

**கணபதி ஹோம நாட்கள்**

| | | |
|---|---|---|
| 18.7.2016 திங்கள் | 21.7.2016 வியாழன் | 22.7.2016 வெள்ளி |
| 25.7.2016 திங்கள் | 1.8.2016 திங்கள் | 4.8.2016 வியாழன் |
| 7.8.2016 ஞாயிறு | 8.8.2016 திங்கள் | 10.8.2016 புதன் |
| 14.8.2016 ஞாயிறு | | |

---

**மாலை நேர சுபநாட்கள்: நிச்சியம், மஞ்சள் நீராட்டுவிழா, சலங்கை பூஜை**

| | | |
|---|---|---|
| 21.7.2016 வியாழன் | 22.7.2016 வெள்ளி | 24.7.2016 ஞாயிறு |
| 25.7.2016 திங்கள் | 7.8.2016 ஞாயிறு | 8.8.2016 திங்கள் (வாக்கியப்படி) |
| 12.8.2016 வெள்ளி | 14.8.2016 ஞாயிறு | |

## ஆடி (திருக்கணிதம்) மாத சுப முகூர்த்த நாட்கள்

| த.தே | கிழமை | ஆ.தே | திதி | நட் | யோ | லக்னம் | நேரம்-காலை |
|---|---|---|---|---|---|---|---|
| 03 | திங்கள் | 18.07.2016 | வ.சதுர்தசி | மூலம் | சி | கடகம் | 06:00 - 07:30 |
| 06 | வியாழன் | 21.07.2016 | தே.துவிதியை | திருஓணம் | சி | கன்னி | 09:30 - 10:30 |
| 23 | ஞாயிறு | 07.08.2016 | வ.பஞ்சமி | அஸ்தம் | சி | சிம்மம் | 06:30 - 07:30 |
| 24 | திங்கள் | 08.08.2016 | வ.சஷ்டி | அஸ்தம் | சி | கடகம் | 05:00 - 06:30 |
| 30 | ஞாயிறு | 14.08.2016 | வ.ஏகாதசி | மூலம் | அ | சிம்மம் | 06:00 - 07:30 |

**வாக்கிய பஞ்சாங்க முறை முகூர்த்த நாட்கள்: ஆடி 3,6,7,10, 17, 20, 23, 24, 26, 30**

**கிராமிய இசைக்கலைஞர்களுக்கு இந்த மாதம் மட்டுமே வாழ்வாதாரத்தை தரும் மாதம் எனவே அவர்களின் சம்பளத்தினை குறைக்காமல் தருவோம். கிராமியக்கலைஞர்கள் வளமையான வாழ்க்கை வாழவில்லை. வறுமையை சந்தித்து தமிழகத்தின் அடையாளத்தை காப்பவர்கள்.**

**விரதாதி நாட்கள்**

| | | | |
|---|---|---|---|
| தக்ஷனாயன புண்யகாலம் | 16.7.2016 சனி | பதினெட்டாம் பெருக்கு | 2.8.2016 செவ்வாய் |
| சுக்ல பிரதோஷம் | 17.7.2016 ஞாயிறு | குரு பெயர்ச்சி (வாக்கியம்) | 2.8.2016 செவ்வாய் |
| பவுர்ணமி | 19.7.2017 செவ்வாய் | சந்திர தரிசனம் | 4.8.2016 வியாழன் |
| சிரவண விரதம் | 21.7.2017 வியாழன் | திருவாடிப்பூரம் | 5.8.2016 வெள்ளி |
| ஸ்ரீஜெயந்திரர் ஜயந்தி | 22.7.2016 வெள்ளி | நாக சதுர்த்தி | 6.8.2016 சனி |
| சங்கடஹர சதுர்த்தி | 23.7.2016 சனி | நாக - கருட பஞ்சமி | 7.8.2016 ஞாயிறு |
| வாஸ்து தினம் | 26.7.2016 செவ்வாய் | ஆடி சஷ்டி | 8.8.2016 திங்கள் |
| புதாஷ்டமி | 27.7.2016 புதன் | திருவாடி சுவாதி | 10.8.2016 புதன் |
| ஆடிக்கிருத்திகை | 28.7.2016 வியாழன் | குரு பெயர்ச்சி | 11.8.2016 வியாழன் |
| சர்வ ஏகாதசி | 30.7.2016 சனி | வரலக்ஷ்மி விரதம் | 12.8.2016 வெள்ளி |
| கிருஷ்ண பிரதோஷம் | 31.7.2016 ஞாயிறு | ஏகாதசி | 14.8.2016 ஞாயிறு |
| சிவராத்திரி | 1.8.2016 திங்கள் | சோமசுக்ல பிரதோஷம் | 15.5.2016 திங்கள் |
| ஆடி அமாவாசை | 2.8.2016 செவ்வாய் | விஷ்ணுபதி புண்யகாலம் | 16.8.2016 செவ்வாய் |

**அஷ்டம சுத்தி தினங்கள் (பத்திர பதிவு, புதிய வாகனம், சீமந்தம், மனைபூஜை)**

| | | |
|---|---|---|
| 18.7.2016 | திங்கள் | காலை 9 மணி முதல் காலை 10:30 மணி வரை, பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரை. |
| 21.7.2016 | வியாழன் | காலை 7:45 மணி முதல் பிற்பகல் 1:30 மணி வரை, மாலை 3 மணி முதல் மாலை 4 மணி வரை |
| 22.7.2016 | வெள்ளி | காலை 7:45 மணி முதல் காலை 10:30 மணி வரை, பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரை. |
| 24.7.2016 | ஞாயிறு | பிற்பகல் 1:45 மணி முதல் மாலை 3:45 மணி வரை. |
| 01.8.2016 | திங்கள் | காலை 7 மணி முதல் காலை 7:30 மணி வரை, காலை 9 மணி முதல் காலை 10:30 மணி வரை, பகல் 12 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை. |
| 04.8.2016 | வியாழன் | காலை 7:30 மணி முதல் பிற்பகல் 1:30 மணி வரை, இரவு 7:15 மணி முதல் இரவு 10:30 மணி வரை. |
| 07.8.2016 | ஞாயிறு | காலை 6:40 மணி முதல் பகல் 12 மணி வரை, பிற்பகல் 1:30 மணி முதல் மாலை 3 மணி வரை, இரவு 8:45 மணி முதல் இரவு 10 மணி வரை. |
| 10.8.2016 | புதன் | காலை 6:25 மணி முதல் காலை 7:30 மணி வரை, காலை 9 மணி முதல் பகல் 10:30 மணி வரை. |
| 12.8.2016 | வெள்ளி | இரவு 8:33 மணி முதல் இரவு 10:10 மணி வரை. |
| 14.8.2016 | ஞாயிறு | காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரை, நன் பகல் 1:30 மணி முதல் நன் பகல் 2:30 மணி வரை, இரவு 8:15 மணி முதல் இரவு 9:45 மணி வரை. |

**சாந்தி முகூர்த்தம்**

| | | |
|---|---|---|
| 04.8.2016 | வியாழன் | இரவு 7:15 மணி முதல் இரவு 10:30 மணி வரை. |
| 07.8.2016 | ஞாயிறு | இரவு 8:45 மணி முதல் இரவு 10 மணி வரை. |
| 12.8.2016 | வெள்ளி | இரவு 8:33 மணி முதல் இரவு 10:10 மணி வரை. |
| 14.8.2016 | ஞாயிறு | இரவு 8:15 மணி முதல் இரவு 9:45 மணி வரை. |

**மூதாதையர் வழிபாடு நாட்கள்: (புணித ஸ்தங்களில் தர்பணம், பிண்டம் வைத்து வழிபட உகந்த நாள்)**

தக்ஷ்னாயன புன் யகாலம் 16.7.2016 சனி
ஆடி அமாவாசை: 2.8.2016 செவ்வாய்
வைதிருதி சிரார்தம்: 19.7.2016 செவ்வாய்
வியதீபாத சிரார்தம்: 3.8.2016 புதன்
விஷ்ணுபதி புன் யகாலம் 16.8.2016 செவ்வாய்
ஜூலை: 16, 19, 20, 22, 27, 28, 29, 30, 31 ஆகஸ்ட் 2, 3, 5, 6, 7, 8, 9, 11, 12, 14, 16

**வானியல் தகவல்**

| நிகழ்வு | தேதி | நேரம் | குறிப்பு | நிகழ்வு | தேதி | நேரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சனி அருகில் நிலவு | 2016 Jul 16 | 10 | 3.43° South | புதன் அருகில் நிலவு | 2016 Aug 5 | 04 | 0.56° North |
| சுக்கிரன் அருகில் புதன் | 2016 Jul 16 | 23 | 0.53° South | மகம் அருகில் சுக்கிரன் | 2016 Aug 5 | 14 | 1.09° South |
| நிலவு அண்மைநிலை | 2016 Jul 27 | 17 | 369676.180 km | குரு அருகில் நிலவு | 2016 Aug 6 | 09 | 0.21° North |
| ரோகினி அருகில் நிலவு | 2016 Jul 29 | 17 | 0.29° South | சித்திரை அருகில் நிலவு | 2016 Aug 8 | 18 | 5.77° South |
| மகம் அருகில் புதன் | 2016 Jul 30 | 23 | 0.33° South | நிலவு தொலைவுநிலை | 2016 Aug 10 | 06 | 404228.319 km |
| புனர்பூசம் அருகில் நிலவு | 2016 Aug 1 | 23 | 10.70° North | செவ்வாய் அருகில் நிலவு | 2016 Aug 12 | 03 | 8.16° South |
| சுக்கிரன் அருகில் நிலவு | 2016 Aug 4 | 12 | 2.90° North | கேட்டை அருகில் நிலவு | 2016 Aug 12 | 16 | 9.92° South |
| மகம் அருகில் நிலவு | 2016 Aug 4 | 14 | 1.68° North | சனி அருகில் நிலவு | 2016 Aug 12 | 17 | 3.66° South |